26.03.2026
CC.147/2021
PW–1 முத்துபாண்டியம்மாள் க/பெ.ஜெயக்கொடி

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அடித்ததில் எனக்கு கையில் அடிபட்டதால் என்னால் எழுதவில்லை. நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக் கொண்டார்கள். என்னுடன் எனக்கு தெரிந்த நபர்கள் வந்திருந்தார்கள் என்றால்சரிதான். ஆனால் அவர்களுக்கு எழுத படிக்க தெரியாது. அ.சா.3 என்ன படித்திருக்கிறார் என்றால் 12ம் வகுப்பு படித்திருக்கிறார். புகார் கொடுக்கும் போது அ.சா.3 என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது எனது கணவரும் என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. அவருக்கு தலையில் தையல் போட்டதால் மருத்துவமனையில் இருந்தார். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். இரத்தக்கட்டு கையில் இருந்ததால் ஊசி போட்டும் மாத்திரை கொடுத்தும் அனுப்பிவிட்டார்கள். அந்த போலிசார் போட்ட முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அதில் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் போது தான் புகார் வாக்குமூலம் பதிவு செய்யபட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்னபடி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் நான் முதல் தகவல் அறிக்கையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும் தற்போது வெளியோயாளியாக சிகிச்சை பெற்றதாகவும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் முரண்பாடாகவும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்ததற்கு பின்பு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். முதல் தகவல் அறிக்கையில் வலது தோள்பட்டையிலும் வலது முழங்கையிலும் என்னை அடித்துக் காயம் ஏற்படுத்தினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எனது

வலதுகால் முட்டியில் தான் எனக்கு அடிபட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். நான் சொன்ன படி எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் புகாரில் வீக்கக் காயம் என்று சொல்லிவிட்டு தற்போது முதல் விசாரணையில் இரத்தக்காயம் என்று மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளால் எனக்கு எவ்வித காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு திருமங்கலம் மருத்துவமனையில் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேனா என்றால் எனது கணவர் மற்றும் எனது அப்பா சென்றார்கள். எனக்கு 3 வயது குழந்தை இருந்ததால் செல்ல முடியவில்லை. அங்கு மதுரை மருத்துவமனையில் விசாரித்த விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மதுரையில் எனது கணவர் மருத்துவமனையில் இருக்கும் போது என்னையோ எனது கணவரையோ போலிசார் விசாரிக்கவில்லை என்று சொன்னால் என்னை விசாரிக்கவில்லை. எனது கணவரை விசாரித்தார்களா என்று தெரியாது. நானும் எனது கணவரும் சேர்ந்து இருக்கும் போது போலிசார் விசாரிக்கவில்லை. போலிசில் நான் கொடுத்த புகாரில் 2வது எதிரி என்னை கடப்பாறையால் அடித்தார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் முதல் விசாரணையில் 1வது எதிரி கடப்பாறையால் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அந்த கடப்பாறை 6, 7 அடி இருக்குமா என்றால் இருக்கும். சம்பவம் நடந்ததாக கூறும் இடம் எனது வீட்டிற்கு கிழக்கு புறம் என்றால் சரிதான். அந்த இடத்தில் நானோ எனது குடும்பத்தினரோ செல்லக்கூடாது என்று திருமங்கலம் முன்சிப் நீதிமன்றத்தில் O.S.301/2018 என்ற வழக்கில் தடை உத்தரவு உள்ளதா என்றால் சரிதான். அவ்வாறுதடை உத்தரவு இருந்ததால் தான் எதிரிகள் மீது முன் பகை கொண்டு நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

புகார் அளிக்கும் போது பின்னந்தலையில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் தலையில் அடிபட்டதாக சொல்லியுள்ளேன். நானும் எதிரிகளும் உறவினரா என்றால் உறவினர்கள். எங்களுக்குள் 3 வருடங்களுக்கு மேலாக சிவில் பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். இதனால் எங்களுக்குள் அடிக்கடி பிரச்சினை

ஏற்பட்டு காவல் நிலையம் செல்வது வழக்கம் என்றால் சரியல்ல. இந்த இடம் சம்பந்தமாக ஏற்கனவே காவல் துறையில் புகார் இருந்து சர்வேயரை வைத்து அளந்து எடுத்துக் கொள்ளுமாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குள் எதிரிகள் கடப்பாறை கொண்டு பிரச்சினை செய்ததால் தான் சண்டை. சிவில் வழக்கு போடுவதற்கு முன்பாகவே காவல் துறையில் பிரச்சினை குறித்து புகார் அளித்து அதன் பேரில் சர்வேயர் வந்து இடத்தை அளந்து சென்றார் என்றால் சரிதான். 2014 ல் இருந்தே பிரச்சினை இருந்துள்ளது.

அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சிவில் பிரச்சினையை மனதில் வைத்தும் நீதிமன்ற தடை உத்தரவையும் மீறி அந்த இடத்தை நான் பயன்படுத்தியதால் அந்த இடத்தில் உள்ள பள்ளத்தில் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகள் ராஜேஷ் மற்றும் பவித்ரா எனது கொழுந்தன் மற்றும் கொழுந்தியா என்றால் சரிதான். சம்பவத்தின் போது ராஜேஷ் இல்லை. பவித்ரா இருந்தார், அவ்வாறு யாருமே இல்லை என்றாலும் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

26.03.2026
CC.147/2021
PW–2 ஜெயக்கொடி த/பெ.அழகர்சாமி

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சினை சம்பந்தமாக கருத்துவேறுபாடு உள்ளதா என்றால் இடப்பிரச்சினை உள்ளது. புகாரை எனது மனைவி தான் கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு எனது மனைவி கொடுக்கும்போது அதில் உள்ள விபரம் தெரியாது என்றால் சரிதான். திருமங்கலம் மருத்துவமனையில் இருக்கும் போது என்னை போலிசார் விசாரித்து கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். திருமங்கலம் மருத்துவமனையில் விசாரித்த பின்பு என்னை போலிசார் மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். இடம் சம்பந்தமாக நாங்கள் அங்கு செல்லக்கூடாது என்று தடை உத்தரவு இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தடை உத்தரவு பிறப்பிக்கபட்ட இடத்தில் சம்பவம் என்றால் அதற்கு வெளியே ரோட்டில் நடந்தது. போலிசார் என்னை விசாரிக்கும் போது ரோட்டில் தான் சம்பவம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது புகாரில் அழகர்சாமி கையில் வைத்திருந்த மண்வெட்டியை திருப்பி எனது மனைவியின் வலது தோள்பட்டையிலும் அவரது மகன் செல்வக்கண்ணன் கடப்பாறையை வைத்து என் மனைவியின் வலது முழங்கையிலும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் செல்வக்கண்ணன் எனது மனைவியின் முழங்காலில் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எவ்வித சம்பவமும் நடக்காததால் நான் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசில் நான் கொடுத்த புகாரில் எதிரிகள் இருவரும் என்னை கடப்பாறை மற்றும் மண்வெட்டியால் தாக்கியதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் முதல் விசாரணையில் எதிரிகள் இருவரும்

கடப்பாறையை வைத்து என்னை தலையில் அடித்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை அவ்வாறு தாக்கவில்லை என்பதால் நான் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடப்பாறை 2 –3 அடி இருக்குமா என்றால் 5 –6 அடி இருக்கும். அவ்வாறு எவ்வித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீதுள்ள பகைமையினால் இடத்தை கைப்பற்றவேண்டும் எண்ணத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றாலும் எதிரிகள் எங்களை அடிக்கவில்லை என்று சொன்னாலும் நாங்களாகவே காயத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

26.03.2026
CC.147/2021
PW–3 பவித்ரா க/பெ.ராஜேஷ்கண்ணன்

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் அ.சா.1 மற்றும் 2 க்கும் உறவினர் என்றால் சரிதான். அ.சா.2 எனது மச்சினன் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் அருகில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் போது அ.சா.1 சொல்லி தான் நான் போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் நான் நேரடியாக பார்த்ததை சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் தடை உத்தரவு இருப்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல்துறையில் அளித்த புகாரில் அழகர்சாமி மண்வெட்டியை வைத்து அ.சா.1 ஐ வலது தோள்பட்டையில் தாக்கினார் என்றும் செல்வக்கண்ணன் வலதுமுழங்கையில் கடப்பாறையை வைத்து தாக்கினார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் செல்வக்கண்ணன் வலது முழங்காலில் அடித்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் முரண்பாடாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் புகாரில் இரண்டு பேரும் சேர்ந்து அ.சா.2 ஐ தாக்கினார்கள் என்றும் முதல் விசாரணையில் அழகர்சாமி மட்டும் தாக்கினார் என்றும் மாறி மாறி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாட்சிகளுக்கு உறவினர் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை